தமிழ்நாடு சட்டப்பேரவை

வெள்ளிக்கிழமை, 1973 ஆகஸ்ட் 10.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) தகவல் கோரல்

(அ) ராஜீநாமாச் செய்வதாக அவையில் சொன்ன இரண்டு உறுப்பினர்களும் ராஜீநாமாச் செய்துவிட்டார்களா என்பது குறித்து

THIRU J. JAMES: Sir, under Rule 64 of the Assembly Rules, I would like to raise a matter.

நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு பேர்கள் தங்கள் பதவிகளை ராஜீனாமா செய்வதாகக் கூறினார்கள். அவர்கள் பதவிகளை ராஜீனாமா செய்யவேண்டுமென்றால் தங்களது அறையில் அதனைச் செய்ய வேண்டும் என்று கூறினீர்கள். அவர்களில் யாராவது பதவியை ராஜீனாமா செய்தார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நானா சொன்னேன்?

திரு. ஜே. ஜேம்ஸ்: தாங்கள் அவ்வாறு சொல்லவில்லை. திருத்திக் கொள்கிறேன்.

அந்த இரண்டு உறுப்பினர்கள் தங்கள் பதவிகளை ராஜீனாமா செய்து தங்களுக்கு அறிவித்திருக்கிறார்களா? இல்லையென்றால், யாராவது பதவியை ராஜீனாமா செய்திருக்கிறார்களா? இது குறித்த விவரத்தைச் சபைக்கு அறிவித்தால் நலமாக இருக்கும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த அவையில் இருக்கும் உறுப்பினர் எவரும் இந்த அவையை விட்டுப் போவதைப் பேரவைத் தலைவர் விரும்ப மாட்டார். அப்படிப்பட்ட நிலை ஏதும் ஏற்படவில்லை; ஏற்படக் கூடாது என்றும் நான் விரும்புகிறேன்.